# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2228 - 2021 මැයි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.05.13

*2228 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | *1108* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1109* |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | *1111* |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, யூன் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மே மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1107-B 82230-5,403 (2021/ 05)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனு கோரல்**

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2021**

*கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனு கோரல்கள் 2021.05.17 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனு கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | கலவானை | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி | கலவானையைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2021.07.01 |

*பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.- அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் கராஜ் வசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2,500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2021.05.17 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

ஏ. எல். ஷியாமலீ சித்ரலேகா பெரேரா,
நில அளவையாளர் நாயகம்.

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 05,
2021, ஏப்பிறல் 30.*

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2021*

விலைமனு கோரல் விண்ணப்பப்படிவம்

*கட்டிட உரிமையாளருக்காக :-*

*01.* முழுப்பெயர் :-------------------------------------------------------------------------------------------.
*02.* முகவரி :-----------------------------------------------------------------------------------------------.
*03.* தொலைபேசி இலக்கம் :-------------------------------------------------------------------------------.
*04.* தேசிய அடையாள அட்டை இலக்கம் :-------------------------------------------------------------------.

கட்டிடம் தொடர்பாக :-

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :----------------------------
------------------------------------------------------------------------------------------------------------.
02. மாதாந்த வாடகைத் தொகை :---------------------------------------------.
03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----------------------------------------------------------------------.
04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :-----------------------------------;
05. இடத்தின் விஸ்தீரணம் :------------------------------------------------------------------------------------.
06. கட்டிடத்தின் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :---------------------------------.
07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-------------------------------------------------.
08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-----------------------------------------------.
09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி) :-------------------------------------------------.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :------------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

05-248

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிரசித்த நொத்தாரிசு முல்லேகம முதியன்சலாகே கான்சனா குமாரி (சந்தோஷி எஸ். ஹேரத் எஸோஸியேட்ஸ்) அவர்களால் நிறைவேற்றி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 631 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் மற்றும் 2011.02.15 ஆந் திகதியுடையதுமான விசேட அற்றோணி தத்துவப்பத்திரத்தின் கீழ், இல. 135/ 1, காலி வீதி, தெகிவளை என்ற முகவரியில் கூட்டிணைக்கப்பட்ட "சிறாஸ் டெவலப்பர்ஸ் (பிரைவட்) லிமிட்ட் " நிறுவனத்தால், இல. 100/ 1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய என்ற முகவரியில் கூட்டிணைக்கப்பட்ட "லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி பீஎல்சீ" (PQ 70) என்ற நிறுவனத்தை தனது அங்கீகாரம்பெற்ற அற்றோணி தத்துவதாரராக செய்யப்பட்ட நியமனம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மேற்சொல்லப்பட்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரம், கொழும்பு காணிப்பதிவகத்தில் எழுத்துமூல அதிகாரம் மற்றும் அற்றோணி தத்துவப்பத்திர பதிவுப் புத்தகத்தில் A 813 ஆம் பிரிவில் 293 ஆம் இருமடி இலக்கத்தில் நாளேட்டு இல. 7826 இன்கீழ் பதிவு செய்யப்பட்டது.

இயக்குனர்,
சிறாஸ் டெவலப்பர்ஸ் (பிரைவட்) லிமிட்ட்,
இல. 135/ 1, காலி வீதி, தெகிவளை, இலங்கை.

05-221

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

உதுகொட, மஹரங்கல்லையை வதிவிடமாகக் கொண்ட தஹநாயக்க விதானலாகே அமித் லக்மால் தஹநாயக்கா (தே. அ. அ. இல. 198921510039) ஆகிய நான், எல். ஏ. பந்துல சமரசேகர பிரசித்த நொத்தாரிசு அவர்களால் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 2349 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எனது செயல்களை மேற்கொள்வதற்காக எனது உண்மையானவரும், சட்டபூர்வ அற்றோணி தத்துவதாரருமான உதுகொட, கஹடகஹமுலையை வதிவிடமாகக் கொண்ட மெத்தும பொருமால் ஆரச்சில்லாகே சுஜித் விக்ரமசிங்க (தே. அ. அ. இல. 833111370V) என்பவரை நியமித்ததோடு, அப்பத்திரம் உதவிப் பதிவாளர் ஜெனரால், இரத்தினபுரி, ஊவா சப்பிரகமுவ வலய அலுவலகத்தில் தொகுதி 27 இல் 63 ஆம் இலக்கம் கொண்ட பதிவுப்பத்திரத்தில் 794 ஆம் நாளேட்டு இலக்கத்தின்கீழ் 2020.09.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், மேற்கூறிய 2349 ஆம் இலக்க அற்றோணி தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்கிறேன் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

அதற்கமைய மேற்கூறிய 2349 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவப்பத்திரம் இன்று முதல் செயல் இழப்பதோடு இப்பத்திரம் ஊடாக அற்றோணித் தத்துவம் பெற்றவருடன் இதன் பிறகு மேற்கொள்ளும் எந்தவொரு செயற்பாடும் செல்லுபடியற்றது என்பதனையும்

அறிவித்துக்கொள்கிறேன். மேலும், இதன் பிறகு அற்றோணி தத்துவப்பத்திரம் எந்தவொரு நபருக்கும் கொடுக்கவில்லை என்பதனையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

தஹநாயக்க விதானலாகே அமித் லக்மால் தஹநாயக்கா.

05-184

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தற்போது மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் மினுவான்கொடை, பத்தடுவன தேவாலவத்த, இலக்கம் 111/11 இல் வதியும் தே. அ. அ. இல. 786024110 V உடைய ராஜபக்ஷ தேவகே கிறிசாந்தி திலீஷா ராஜபக்ஷ ஆகிய எனக்கு தற்போது வெளிநாடான சவூதி அரேபியாவில் சேவையாற்றும் கம்பஹா மாவட்டத்தில் மினுவான்கொடை, பத்தடுவன தேவாலவத்த, 111/11 ஆம் இலக்க வதிவிடத்தைக் கொண்ட தே. அ. இல. 731920877 V உடைய சூரிய ஆரச்சிகே சோமசிறி என்பவரினால் 2020, மாச்சு மாதம் 06 ஆந் திகதி அற்றோணி அதிகாரம் வழங்கப்பட்டது. அது மாலிகா குமாரி திசாநாயக்க பிரசித்த நொத்தாரிசினால் தயாரிக்கப்பட்டு கம்பஹா காணிப்பதிவு அலுவலகத்தில் 1075 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அற்றோணி அதிகாரம் இனிமேலும் வலுவில் இருக்க வேண்டிய தேவை இல்லாததால் அதை இரத்துச்செய்து வலுவிழக்கச் செய்வதாக இத்தால் ராஜபக்ஷ தேவகே கிறிசாந்தி திலீஷா ராஜபக்ஷ ஆகிய நான் பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் அறிவிக்கின்றேன்.

ராஜபக்ஷ தேவகே கிறிசாந்தி திலீஷா ராஜபக்ஷ.

05-103

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மட்டக்களப்பு, ஏறன்ஸ் ஒழுங்கை, இல. 18, நாகப்பர் முருகுப்பிள்ளை கந்தசாமி என்பவருக்கு வத்தளை, ஹெந்தல, நாயக்க கந்த, புனித மோரிஸ் ஒழுங்கை, இல. 12/ 7-B, தற்சமயம் 6415, 23rd Avenue, Montreal (Quebec), HIT 3N2, Canada நாகராஜா விவேகானந்தராஜா ஆகிய என்னால் 3250, கிழக்கு ஜீன்-ரொலினி, மொன்ரியல், கியுபெக் (east Jean-Taloni, Montreal Quebec, Canada) கனடா H2A 1W1 இல் வசிக்கும் MARYSE PAQUIN NOTARY அவர்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட 2017.03.27 ஆந் திகதி கொண்ட மட்டக்களப்பு கிழக்கு வலயப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் 2017.05.05 ஆந் திகதிய 300 ஆம் தொடர் இலக்கத்தில் 25 ஆம் புத்தகத்தில் 18 ஆம் பக்கத்தில் பதியப்பட்டதுமான விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்கின்றேன் என்பதனை இலங்கை அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். இனி இவரால் புரியப்படும் எந்த ஒரு செயலுக்கும் நான் பொறுப்பானவர் அல்ல என்றும் அறிவிக்கின்றேன்.

நாகராஜா விவேகானந்தராஜா.

05-186

---

## ஸய்ஸி ஏஸியா (பிரைவேட்) லிமிடெட்

அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. PV 83109

இத்தால் சகலரும் அறிவது யாதெனில், 2021, சித்திரை 23 ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக் கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 319 (1)(b) இன்கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் மூலம் 2021, சித்திரை 23 ஆந் திகதி முதல் கலைப்பதற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஜீ. குமாரசுவாமி,
பணிப்பாளர்.

2021, சித்திரை 29.

05-209/1

---

## ஸய்ஸி ஏஸியா (பிரைவேட்) லிமிட்டட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 346(1) இன் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. PV 83109

கொழும்பு 04, காசல் வீதி, இல. 11, 03 ஆம் மாடியில் அலுவலகம் உள்ள ஜெறாட் ஜீவானந்தன் டேவிட் ஆகிய நான், இல. 06, பிளவர் எவனியூ, கொழும்பு 07 உள்ள ஸய்ஸி ஏஸியா (பிரைவேட்) லிமிட்டட்டின் 2021, சித்திரை 23 ஆந் திகதி நடைபெற்ற அதிவிசேட பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்படி கம்பனியின் கலைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை சகலருக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

ஜெறாட் ஜீவானந்தன் டேவிட்,
கலைப்பாளர்,
ஸய்ஸி ஏஸியா (பிரைவேட்) லிமிட்டட்.

2021, சித்திரை 29.

05-209/2

# ஏல விற்பனைகள்

## செலான் வங்கி பீஎல்சீ - களுத்துறை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான ஏல விற்பனை*

### பிரசித்த ஏல விற்பனை

களுத்துறையில் W/BB 6623 எனும் வியாபார பதிவு இலக்கத்தைக் கொண்ட கீர்த்தி நாமம்பெற்ற ''பெஷன் யு - டர்ன்'' எனும் நிறுவனத்தின் ஏக உரிமையாளராக இருந்துகொண்டு வியாபாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் களுத்துறையைச் சேர்ந்த வெல் அருமகே உஷான் கோசல பெர்ணாண்டோ கடப்பாடுடையவராகவும்/ஈடுவைத்தவராகவும், செலான் வங்கி பீஎல்சீ சார்பாக பிரசித்த நொத்தாரிசு H. K. கீதிகா பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு இரண்டும் 2018.10.29 ஆந் திகதியிடப்பட்ட 1875, 1876 ஆம் இலக்க இரு ஈட்டுமுறிகளின் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராததால், 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு காணி அமைந்திருக்கும் இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

இந்த ஏலவிற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கோவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடாத்தப்படும்.

### அட்டவணை

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை தொட்டமுனை வடக்கின் களுத்துறை படவில் உள்ள களுத்துறை பிரதேச சபை எல்லைக்குள் களுத்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 731-A காலமுல்ல மிகவும் சரியாக 731 காலமுல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள காலமுல்லயில் அமைந்துள்ள மாவத்த பொடவத்த மற்றும் தலஎலியேவத்த என அழைக்கப்படும் காணி, உரிமம்பெற்ற நில அளவையாளர் O. S. B. குமாரசிறியினால் தயாரிக்கப்பட்ட 2018.05.30 ஆந் திகதியிடப்பட்ட 6060 ஆம் இலக்க வரைபடத்தில் (உரிமம் பெற்ற நில அளவையாளர் L. W. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 2017.09.30 ஆந் திகதியிடப்பட்ட 3888 ஆம் இலக்க வரைபடம் மற்றும் 2017.08.12 ஆந் திகதியிடப்பட்ட 3866 ஆம் இலக்க வரைபடம் ஆகிய வற்றில் உள்ள B1A என்ற காணித்துண்டின் ஒருங் கிணைப்பு அளவையொன்று செய்யப்பட்டிருக்கிறது) காணித்துண்டு A என அடையாளமிடப்பட்ட ஒரு றூட் பதினாறு தசம் ஒன்று சைபர் பேர்ச் (0ஏ. 1றூ. 16.10பே.) அல்லது 0.14189 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 6060 இற்கு ஏற்ப காணி மற்றும் அதிலுள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.**

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.**- களுத்துறை மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து காலி வீதி வழியாக அளுத்கமையை நோக்கி சுமார் 3.0 கி. மீற்றர் தூரம் சென்று கட்டுக்குருந்த சந்தியை அடைந்து அதிலிருந்து மேலும் அதே காணியில் 850 மீற்றர் தூரம் தொடர்ந்து செல்லும்போது குறிப்பிட்ட காணியை வலது பக்கத்தில் காணலாம். அத்தோடு 46 ஆவது கி. மீற்றர் கல்லுக்கு 50 மீற்றர் அண்மித்தும் இக்காணி அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்.**- 2021.02.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2021.02.12 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', ''அத'' மற்றும் ''தமிழ் மிரர்'' ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,500.00 ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% த்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்ட ரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீ தாபனத்திற்குச் செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகனை மேற்கொள்ளவும்.

''பிரதான முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, இலக்கம் இல. 90, காலி வீதி, கொழும்பு 03, தொலைபேசி இலக்கங்கள் : 011-2456485, 011-2456479, 011-2456473.

''எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏல விற்பனையை இடைநிறுத்துவதற்கு/ இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு அதிகார முண்டு.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம்பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை, பனாகொடை,
ஹோமாகம,
தொலைபேசி இலக்கம் 071-4318252.

5-213

**செலான் வங்கி பீஎல்சீ - பொரலகஸ்கமுவ கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை*

**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை**

*கொழும்பைச் சேர்ந்த சிவபாதம் ராஹூலன் அல்லது சிவபாதம் ராகுலன் மற்றும் கோமதி வாசுகி ராஜபுவனேஸ்வரன் ஆகிய இருவரும் கடப்பாடுடையவர்களாகவும்/ ஈடுவைத்தவர்களாகவும் செலான் வங்கி சார்பாக பிரசித்த நொத்தாரிசு H. D. தர்ஷிமா J பிரேமரத்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.04.27 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 229 இன் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராததால், 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி பி. ப. 12.30 மணிக்கு காணி அமைந்திருக்கும் இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.*

*சுகாதார அமைச்சின் கோவிட்-19 நெறிமுறைகளைப் பின்பற்றி அக்கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப இவ் ஏல விற்பனை நடாத்தப்படும்.*

**அட்டவணை**

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளவின் அதிகாரம்பத்துவில் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மட்டக்குளிய, இலக்கம் 01, கிராம அலுவலர் பிரிவினுள் ஸ்ரீ விக்ரம மாவத்தை, மட்டக்குளிய, கடவன்துல கிராமத்தில் அமைந்துள்ள 100, 104, 106, 108, 110 ஆகிய வரிமதிப்பீட்டிலக்கங்களையும் தற்போது 102/ 2 மற்றும் 102/ 2A ஆகிய வரிமதிப்பீட்டிலக்கங்களையும் கொண்ட 'பக்மீகஹஓவிட்ட' என்று அழைக்கப்படும் காணி, உரிமம்பெற்ற நில அளவையாளர் எம். எஸ். லோகநாதனினால் தயாரிக்கப்பட்ட 1976.10.08 ஆந் திகதியிடப்பட்ட 937 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 03 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பதினாறு தசம் எட்டு சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 16.80பே.) விஸ்தீரணமுடைய காணி மற்றும் அதிலுள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.***

**பாதையை உபயோகிக்கும் உரிமை கீழே மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது :**

***மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளவின் அதிகாரம்பத்துவில் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மட்டக்குளிய, இலக்கம் 01, கிராம அலுவலர் பிரிவினுள் ஸ்ரீ விக்ரம மாவத்தை, மட்டக்குளிய, கடவன்துல கிராமத்தில் அமைந்துள்ள 100, 104, 106, 108, 110 ஆகிய வரிமதிப்பீட்டிலக்கங்களையும் தற்போது 102/ 2 மற்றும் 102/ 2A ஆகிய வரிமதிப்பீட்டிலக்கங்களையும் கொண்ட 'பக்மீகஹஓவிட்ட' என்று அழைக்கப்படும் காணி, உரிமம்பெற்ற நில அளவையாளர் எம். எஸ். லோகநாதனினால் தயாரிக்கப்பட்ட 1976.10.08 ஆந் திகதியிடப்பட்ட 937 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 04 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட ஆறு தசம் ஆறு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 6.65பே.) விஸ்தீரணமுடைய காணி மற்றும் அதிலுள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம்.***

***காணிக்குப் பிரவேசிக்கும் வழி.-*** *ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள 'இங்குரு கடே சந்தி'யிலிருந்து விக்டோரியா பாலம் (யப்பான் நட்புறவுப் பாலம்) வரை சென்று அதிலிருந்து பாலத்தை அணுக முன்னர் வலது கைப்புறத்தில் அமைந்துள்ள லூகஸ் வீதியினூடாக சென்று, பாலத்திற்குக் கீழால் (அதாவது களனி ஆற்று ஓரமாகச் செல்லும் வீதி) பர்கியூசன் வீதியினூடாக சுமார் 800 மீற்றர் தூரம் சென்று வலது கைப்புறுத்தில் அமைந்துள்ள சேர்ச் வீதியை அடையலாம். அந்த சேர்ச் வீதியினூடாக சுமார் 600 மீற்றர் வரை சென்று ஸ்ரீ விக்ரம வீதி மற்றும் மேலும் சிறிது தூரம் செல்லும்போது மட்டக்குளிய பொலிஸ் நிலையத்தையும் (இடது பக்கத்தில்) தாண்டிச் செல்லும்போது இடது பக்கத்தில் ''கார்கிள்ஸ்'' விற்பனை நிலையங்கள் காணப்படும். ''கார்கிள்ஸ்'' விற்பனை நிலையங்களுக்கு முன்னால் வலது பக்கத்தால் வேறு எந்தப் பாதைகளுக்கும் தொடர்பில்லாத இந்த ஏல விற்பனை செய்யப்படவுள்ள காணியை நோக்கிச் செல்லும் பாதை ஒதுக்கீடானது அகலமாகவும் முன்னே செல்லச் செல்ல 10 அடி அகலமாக ஒடுங்கியதாகவும் காணப்படுகிறது. பிரவேசிக்கும் வழியின் கடைசியில் குறிப்பிட்ட காணி அமைந்துள்ளது. (இக்காணிக்கும் ஸ்ரீ விக்ரம வீதிக்கும் இடைப்பட்ட தூரம் சுமார்த 60 மீற்றர் ஆகும்.)*

***தீர்மான முடிவு அறிவித்தல்கள்.-*** *2021.02.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2021.02.16 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "அத" மற்றும் "தமிழ் மிரர்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

*(1) கொள்வனவு விலையின் 10% ;*
*(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;*
*(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;*
*(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,500.00 ;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;*
*(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.*

மிகுதி 90% த்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்ட ரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீ தாபனத்திற்குச் செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகனை மேற்கொள்ளவும்.

"பிரதான முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு கொழும்பு 03, தொலைபேசி இலக்கங்கள் : 011-2456485, 011-2456479, 011-2456473.

எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏல விற்பனையை நடாத்துவதற்கும்/ இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம்பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை, பனாகொடை,
ஹோமாகம,
தொலைபேசி இலக்கம் 071-43182552,
(546).

5-212

---

இந்த ஏல விற்பனையானது கோவிட்-19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமை யான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

## தேசிய அபிவிருத்தி வங்கி PLC

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை

தேசிய அபிவிருத்தி வங்கி PLC பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உடஹ ஹேவகே சாலிய பிரசன்ன செனவிரத்ன மற்றும் இரிங்குகொட்டுவே கெதர சியாமலி நிசாதி ஏக்கநாயக்க ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும், இரிங்குகொட்டுவே கெதர சியாமலி நிசாதி ஏக்கநாயக்க என்பவர் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி PLC இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 2021.05.31 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் :

**மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர கந்துபலாத்த கோரளை கடுகண்ணாவை மாநகர சபை எல்லைக்குட்பட்ட யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, கடுகண்ணாவை கிராம அலுவலர் பிரிவு, கடவத்கம கிராமத்தில் அமைந்துள்ள "கல்ஹேன மற்றும் கல்ஹேன எனும் கெந்தகொல்லேஹேன" எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் D. R. அபேகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1637 ஆம் இலக்க 2006.06.09 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 என அடையாளமிடப்பட்ட மூன்று றூட் இருபத்துமூன்று தசம் ஒன்பது சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 3றூ. 23.90பே.) பரப்பளவான காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும்.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** கடுகண்ணாவை நகரத்திலிருந்து சுமார் 1.5 கி. மீ. தூரம் கண்டிப் பாதையில் சென்று (சுனில் S. ஜயசுந்தர விளையாட்டு மைதானத்தைக் கடந்து சுமார் 100 மீற்றர் தூரம்) வலது பக்கமாகவுள்ள கடவத்கம பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 400 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் இடதுபக்கத்தில் அமைந்துள்ளது. (வரிப்பண இல. 39, கடவத்கம என இனம்காணலாம்.)

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2021.03.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.03.22 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையின் 10% ( நூற்றுக்குப் பத்து சதவீதம்) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.1/ 2% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000.00 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90%, இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- முகாமையாளர், மையப்படுத்தல் (கடன் அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ., இல. 40, நவம் மாவத்தை,கொழும்பு-02. தொலைபேசி : 011-2448448.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 081-2210595, 071-8446374,
071- 4962449

5-196

---

இந்த ஏலவிற்பனையானது COVID 19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

## தேசிய அபிவிருத்தி வங்கி PLC

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

தேசிய அபிவிருத்தி வங்கி PLC பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உடுகொடகே பிரேமலால் ரன்ஜித் மற்றும் அருண ஷிவந்த உடுகொட ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும், அருண ஷிவந்த உடுகொட ஆகியோர் என்பவர் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி PLC இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 2021.06.01 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் :

**மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து :**

***ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், மெதகிந்த மஹபலாத்த கோரளை பண்டாரவளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவு, அம்பேகொட கிராம அலுவலர் பிரிவு, பண்டாரவளை பிரிவின் மெட்டிபிம்பிய கிராமத்தில் அமைந்துள்ள ''பரனகெதரவத்த'' எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் விஜித செல்லஹேவா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2233 ஆம் இலக்க 2011.07.09 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 2 என அடையாளமிடப்பட்ட முப்பத்தொன்பது தசம் ஐந்து நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 39.54பே.) பரப்பளவான காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மாடிக் கட்டிடமும், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்.***

**ஆதனத்தை வந்தடைதல்.**- பண்டாரவளை நகர மத்தியிலிருந்து சுமார் வெலிமடை பாதையில் 4 ஆம் கி. மீ. கம்பம் அபேகொடை சந்தி வரை வந்து இடதுபக்கமாகவுள்ள கொங்கிரீட் இடப்பட்ட மெட்டிபிம்பிய நோக்கியுள்ள பாதையில் சுமார் 400 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதையின் வலதுபக்கத்தில் பாதையின் எல்லையில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2021.03.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.03.22 ஆந் திகதிய ''திவயின'', ''த ஐலன்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையின் 10% ( நூற்றுக்குப் பத்து சதவீதம்) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000.00 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90%, இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- முகாமையாளர், மையப்படுத்தல் (அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ., இல. 40, நவம் மாவத்தை,கொழும்பு-02. தொலைபேசி : 011-2448448 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 081-2210595, 071-8446374, 071- 4962449.

5-197

இந்த ஏல விற்பனையானது கோவிட்-19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

## தேசிய அபிவிருத்தி வங்கி PLC

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

தேசிய அபிவிருத்தி வங்கி PLC பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாவலப்பிட்டியில் தனது பதிவு அலுவலகம் அமைந்துள்ள தேனுக ஒடோ சர்விஸ் எனும் பெயர் மகுடத்தின் கீழ் பங்கு வியாபாரத்தை நடாத்திச் செல்லும் நாவலப்பிட்டியவைச் சேர்ந்த கதலுவ வெலிகமகே மல்லிகா விஜேரத்ன (முதலாம் கடன் பெறுனர்), நாவலப்பிட்டியவைச் சேர்ந்த ஹேவா வடிகே திலின சந்தருவன் (இரண்டாம் கடன் பெறுனர்) மற்றும் ஹேவா வடிகே இஷார தேனுக சந்தருவன் (மூன்றாம் கடன் பெறுனர்) ஆகியோர் கடப்பாடுடையவர்களாக தேசிய அபிவிருத்தி வங்கி PLC இனால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1 ஆம் விற்பனை - 2021.05.31 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு.

**சொத்து விபரம் :**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பஸ்பாகே கோரளை உடபுலத்கம பத்துவ நாவலப்பிட்டி நகரசபை எல்லைக்குட்பட்ட பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவு, பவ்வாகம கிராம அலுவலர் பிரிவு, இல. 6, நகரப் பிரிவில் அமைந்துள்ள கொத்மலை வீதி, வரிப்பண இல. 177A மற்றும் 197 கொண்ட "இலுக்பிட்டிய, இலுக்பிட்டிய வனாத, இலுப்பிட்டிய கும்புர மற்றும் உடஇலுக்பிட்டிய வத்த" (வெற்றுக் காணி), எனும் தொடர் காணிகளுக்கு உரிமம்பெற்ற நில அளவையாளர் P. ஞானபிரகாசம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 9046 ஆம் இலக்க 2008.05.29 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 02 என அடையாளமிடப்பட்ட பிரித்தொதுக்கப்பட்ட ஒரு றூட் இருபத்தொன்பது தசம் நான்கு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 29.4பே.) பரப்பளவான காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- நாவலப்பிட்டி கடைத்தெருவிலிருந்து கொத்மலை பாதையில் சுமார் 650 மீற்றர் தூரம் 1 ஆம் மைல் கம்பம் வர சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் அமைந்துள்ளது.

2 ஆம் விற்பனை - 2021.05.31 ஆந் திகதி மு. ப. 10.15 மணிக்கு.

**சொத்து விபரம் :**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பஸ்பாகே கோரளை உடபுலத்கம பத்துவ நாவலப்பிட்டி நகரசபை எல்லைக்குட்பட்ட பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவு, இல. 1084, இம்புல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவு, இல. 6, நகரப் பிரிவில் அமைந்துள்ள கொத்மலை வீதி, வரிப்பண இல. 197B, தற்போது இலுக்பிட்டிய என்றழைக்கப்படும் "இலுக்பிட்டிய, உடஇலுக்பிட்டிய வனாத மற்றும் இலுப்பிட்டிய வத்த" எனும் காணி) உரிமம்பெற்ற நில அளவையாளர் P. ஞானபிரகாசம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 12021 ஆம் இலக்க 2018.12.16 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது ஒரு றூட் முப்பத்தெட்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 38பே.) பரப்பளவான காணியும் 10204 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட 15 அடி அகலமான பாதை உரிமை மற்றும் வாய்க்காலுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியும் உள்ளடங்கலும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- நாவலப்பிட்டி கடைத்தெருவிலிருந்து கொத்மலை பாதையில் சுமார் 650 மீற்றர் தூரம் 1 ஆம் மைல் கம்பம் வரை சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் அமைந்துள்ளது. (மேற்கூறிய இரு காணிகளுக்கும் ஒரே பாதையில் செல்லலாம்).

3 ஆம் விற்பனை - 2021.05.31 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு.

**சொத்து விபரம் :**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளை, கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடவத்சத்தர பிரதேச செயலாளர் பிரிவு, இல. 228, வட்டபுலுவ கிராம அலுவலர் பிரிவு, இல. 11, வடபுலுவயில் அமைந்துள்ள வரிப்பண இல. 90, தற்போது மல்கஹமுதுனேவத்த என்றழைக்கப்படும் முன்னர் கங்கானமலாகேவத்த மற்றும் வத்தேகெதர தென்னேஹேன தற்போது வத்த எனும் பிரித்தெடுக்கப்பட்ட காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் P. R. W. M. வீரகோன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 21117 ஆம் இலக்க 2014.12.18 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது பதினொன்று தசம் எட்டு ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 11.875பே.) பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கண்டி நகரத்திலிருந்து அருப்பொல பாதையில் சுமார் 1.2 கி. மீ. தூரம் கல்கடுவ சந்தி வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி பரனகங்தொட்ட பாதைக்குப் பிரவேசித்து (டேவி பாதை) அப்பாதையில் சுமார் 2 கி. மீ. தூரம் வட்டபுலுவ சந்தி வரை வந்து வலது பக்கமாகத் திரும்பி போமலுவ பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் (வரிப்பண இல. 90 எனும் ஆதனம் வரை) வந்து வலதுபக்கமாகத் திரும்பி சுமார் 50 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2021.04.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.03.29 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப் பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்குப் பத்து சதவீதம்) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000.00 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90%, இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- முகாமையாளர், மையப்படுத்தல் (அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ., இல. 40, நவம் மாவத்தை,கொழும்பு-02. தொலைபேசி : 011-2448448 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி : 071- 4962449/071-8446374
தொலைநகல் இல. : 081-2210595

5-204

---

இந்த ஏலவிற்பனையானது Covid 19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

## தேசிய அபிவிருத்தி வங்கி PLC

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை*

தேசிய அபிவிருத்தி வங்கி PLC பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பியகி கமகே சுரேஷ் சில்வா எனும் பியதி கமகே சுரெஷ் சில்வா (1 ஆம் கடன் பெறுனர்) மற்றும் பொன்னுதுரை தவமலர் எனும் பொன்னுதுரை தவமலர் கார்தியஸ் (2 ஆம் கடன் பெறுனர்) ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும் ஈட்டாளர்களாகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி PLC இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 2021.06.03 ஆந் திகதி மு. ப. 09.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் :

சொத்து விபரம் :

### மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து

**கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகரம் மற்றும் கடவத்சத்தர திருகோணமலை பிரதேச செயலாளர் பிரிவு, இல. 243A ஆந்தன்குளம் கிராம அலுவலர் பிரிவு ஆந்தன்குளம் கிராமத்தில் மிஹிந்துபுரயில் அமைந்துள்ள ஆந்தன்குளம் சம்பா ஒழுங்கையில் வரிப்பண இல. 690 எனும் காணி நில அளவையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள PPTRI 30 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 866 இன் மீளளவை செய்யப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட ஆந்தன்குளம் காடு எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் R. R. பாலேந்திரம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.07.01 ஆந் திகதிய 408 A ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் A எனும் அரச காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 19.7 பேர்ச்சஸ் பரப்பளவானது.**

**ஆதனத்தை வந்தடைதல்**.- திருகோணமலை நகரத்திலிருந்து கண்டிப் பாதையில் சுமார் 4 கி. மீ. தூரம் அநுராதபுரம் சந்தி வரை வந்து வலது பக்கமாகத் திரும்பி அநுராதபுரம் பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 01 கி. மீ. தூரம் சம்பா ஒழுங்கை வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி சம்பா ஒழுங்கைக்குள் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 150 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இவ்வொழுங்கையின் இடதுபக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2021.04.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.03.29 ஆந் திகதிய ''திவயின'', ''த ஐலன்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப் பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையின் 10% (நூற்றுக்குப் பத்து சதவீதம்) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000.00 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90%, இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- முகாமையாளர், மையப்படுத்தல் (அறவிடுதல் பிரிவு), தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ., இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு-02. தொலைபேசி : 011-2448448 .

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி,
தொலைபேசி : 081-2210595, 071-8446374, 071-4962449.

5-200

---

இந்த ஏலவிற்பனையானது Covid 19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

## D.F.C.C. வங்கி P.L.C. (D.F.C.C. வர்தன வங்கியின் பின் உரிமையாளர்) இன் பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

D.F.C.C. வங்கி P.L.C பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மொணராகலையைச் சேர்ந்த குலசிங்ஹ ஆரச்சிகே இந்திக பிரியந்த பெரேரா மற்றும் ரஷ்மி மேனகா ஹெலபிட எனும் லக்ஷ்மி மேனகா ஹெலபிட ஆகியோர் கடப்பாடுடையவராக D.F.C.C. வங்கி P.L.C. (D.F.C.C. வர்தன வங்கியின் பின் உரிமையாளர்) சார்பாக பிரசித்த நொத்தாரிசு M.C.J. பீரிஸ் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.11.15 ஆந் திகதிய 2029 ஆம் இலக்க மற்றும் பிரசித்த நொத்தாரிசு அஜித் லியனஆரச்சி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.07.08 ஆந் திகதிய 1071 ஆம் இலக்க முறிகளின் மூலம் D.F.C.C. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம் 2021.06.02 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், பொத்துவில் பிரதேச செயாலாளர் பிரிவு, பானமைபற்று கோரளை பொத்துவில் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அருகம்பே கிராம அலுவலர் பிரிவு, உல்லை கிராமத்தில் அமைந்துள்ள "உல்லை காடு" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் D. M. W. B. திசாநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.06.10 ஆந் திகதிய 1097A ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட லொட் 01 என பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் பாதையை உபயோகிக்கும் உரிமையுடன் ஆகும். காணியின் பரப்பளவு : 01 றூட், 3.5 பேர்ச்சஸ் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- மொணராகலை நகர மத்தியிலிருந்து (மணிக்கூட்டு கோபுர சந்தி) பொத்துவில் பாதையில் சுமார் 68 கி. மீ. தூரம் பொத்துவில் கல்முனை பாதை சந்தி வரை வந்து வலதுபக்கமாகத் திரும்பி வெஹெரகல பனமா பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 3.5 கி.மீ. தூரம் உல்லை பாலத்தைக் கடந்து 4/2 ஆம் மதகு வரை வந்து வலதுபக்கமாகத் திரும்பி சீ டொப் பாதைக்கு (Sea Top Road), (Blue Wave Hotel Road) பிரவேசித்து அப்பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் டயலொக் தொலைத்தொடர்பு கோபுரத்தைக் கடந்ததும் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2021.02.25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2021.02.09 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப் பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1500.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 3,000.00 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- முகாமையாளர் - சட்டப் பிரிவு, D.F.C.C. வங்கி P.L.C., இல. 75, W. A. D. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02, தொலைபேசி இல.: 011-2371371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.
தொலைபேசி இல.: 071-4962449, 071- 8446374.

05-198

---

## D.F.C.C. வங்கி P.L.C. (D.F.C.C. வர்தன வங்கியின் பின் உரிமையாளர்) இன் பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

D.F.C.C. வங்கி P.L.C. பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எம்பிலிபிட்டிய கிலாஸ் சென்டர் எனும் பெயர் மகுடத்தின் கீழ் வியாபாரத்தை நடாத்திச் செல்லும் எம்பிலிபிட்டியவைச் சேர்ந்த அல்கம கோரலலாகே லக்மால் பிரசாத் குமார பெரேரா என்பவர் கடப்பாடுடையவராக D.F.C.C. வங்கி P.L.C. சார்பாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3441, 3443, 3445, 3447, 3436, 3723, 3722, 5205 மற்றும் 6186/ 1063/ 2385 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் வசதிக்காக D.F.C.C. வங்கி P.L.C. இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் ஆரம்பிக்கும் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்பனை செய்யப்படும்.

ஈட்டுமுறி இல. 3441, 3443, 3445, 3447, 3436, 3723, 3722, 5205 மற்றும் 6186/ 1063/ 2385 இன் மூலம் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்.

முதலாம் விற்பனை - 2021.06.07 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு.

**சொத்து விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், தியபொட்டகம்பத்து கொலொன்ன கோரளை எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் எம்பிலிபிட்டிய நகரசபை எல்லைக்குட்பட்ட யோதகம கிராம அலுவலர் பிரிவு, உடகம கிராமத்தில் அமைந்துள்ள மோதரவான எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் I. கொட்டம்பகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.03.08 ஆந் திகதிய 692 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் A என அடையாளமிட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், இணைப்புகள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது இருபத்தேழு தசம் ஏழு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 27.70பே.) பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- எம்பிலிபிட்டிய நகரத்திலிருந்து மித்தெனிய பாதையில் சுமார் 02 கி. மீ. தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

இரண்டாம் விற்பனை - 2021.06.07 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு.

**சொத்து விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், தியபொட்டகம்பத்து கொலொன்ன கோரளை எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் எம்பிலிபிட்டிய நகரசபை எல்லைக்குட்பட்ட எம்பிலிபிட்டிய நவ நகரய கிராம அலுவலர் பிரிவு, உடகம கிராமத்தில் அமைந்துள்ள மோதரவான ஹேன்யாய எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் G. W. K. மனம்பேரி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.10.21 ஆந் திகதிய 7298 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் A என அடையாளமிட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், இணைப்புகள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது சைபர் தசம் சைபர் நான்கு ஐந்து ஹெக்டயார் (0.045 ஹெக்டயார்) அல்லது பதினேழு தசம் ஏழு ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 17.79பே.) பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- எம்பிலிபிட்டிய நகரத்திலிருந்து மித்தெனிய பாதையில் சுமார் 1.5 கி. மீ. தூரம் சென்று வலது பக்கமாகத் திரும்பி வைத்தியசாலை பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 30 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

மூன்றாம் விற்பனை - 2021.06.07 ஆந் திகதி மு. ப. 10.45 மணிக்கு.

**சொத்து விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், தியபொட்டகம்பத்து கொலொன்ன கோரளை எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் எம்பிலிபிட்டிய நகரசபை எல்லைக்குட்பட்ட ஹிங்குரஆர கிராம அலுவலர் பிரிவு, குருஆரகம கிராமத்தில் அமைந்துள்ள கொடஉடவாடிய மூகலான எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் G. W. K. மனம்பேரி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015.10.21 ஆந் திகதிய 7302 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் A என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், இணைப்புகள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது சைபர் தசம் ஒன்று எட்டு மூன்று சைபர் ஹெக்டயார் (0.1830 ஹெக்டயார்) அல்லது ஒரு றூட் முப்பத்திரண்டு தசம் மூன்று ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 32.35பே.) பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- எம்பிலிபிட்டிய நகரத்திலிருந்து இரத்தினபுரி பாதையில் சுமார் 4 கி. மீ. தூரம் 50 கி. மீ. கம்பம் வரை வந்தால் இவ்வாதனம் இப்பாதையின் வலது பக்கத்தில் 50 ஆம் கி. மீ. கம்பத்திற்கு 100 மீற்றர் முன்னால் அமைந்துள்ளது.

நான்காம் விற்பனை - 2021.06.07 ஆந் திகதி மு. ப. 11.45 மணிக்கு.

**சொத்து விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், தியபொட்டகம்பத்து கொலொன்ன கோரளை எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் எம்பிலிபிட்டிய நகரசபை எல்லைக்குட்பட்ட கும்புகொடஆர கிராம அலுவலர் பிரிவு, உடகம கிராமத்தில் அமைந்துள்ள பல்லேபெத்த நிந்தகம ஒரு பகுதி எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் G. W. K. மனம்பேரி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008.04.02 ஆந் திகதிய 3368 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 01A என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், இணைப்புகள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது நான்கு ஏக்கர் மூன்று றூட் முப்பது பேர்ச்சஸ் (4ஏ. 3றூ. 30பே.) பரப்பளவானது,

**ஆதனத்தை வந்தடைதல்**.- எம்பிலிபிட்டிய நகரத்திலிருந்து மித்தெனிய பாதையில் சுமார் 4 கி. மீ. தூரம் சென்று இடதுபக்கமாகத் திரும்பி மின் உற்பத்தி நிலைய பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 1.5 கி. மீ. தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

ஐந்தாம் விற்பனை - 2021.06.07 ஆந் திகதி பி. ப. 12.45 மணிக்கு.

**சொத்து விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், தியபொட்டகம்பத்து கொலொன்ன கோரளை எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் எம்பிலிபிட்டிய நகரசபை எல்லைக்குட்பட்ட உடகம கிராம அலுவலர் பிரிவு, உடகம கிராமத்தில் அமைந்துள்ள ஜாகொடகே பங்குவ ஒரு பகுதி எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் G. W. K. மனம்பேரி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.06.24 ஆந் திகதிய 4463 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 01 என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது ஒரு ஏக்கர் மூன்று றூட் எட்டு பேர்ச்சஸ் (01ஏ. 03றூ. 08பே.) பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- எம்பிலிபிட்டிய நகரத்திலிருந்து இரத்தினபுரி பாதையில் சுமார் 01 கி. மீ. தூரம் சென்று இடதுபக்கமாகத் திரும்பி பனாமுர பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 01 கி. மீ. தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

ஆறாம் விற்பனை - 2021.06.07 ஆந் திகதி பி. ப. 01.30 மணிக்கு.

**சொத்து விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், தியபொட்டகம்பத்து கொலொன்ன கோரளை எம்பிலிபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் எம்பிலிபிட்டிய நகரசபை எல்லைக்குட்பட்ட இல. 214A, எம்பிலிபிட்டிய பல்லேகம கிராம அலுவலர் பிரிவு, பல்லேகம கிராமத்தில் அமைந்துள்ள கொலொன்கஸ்யாய எனும் காணி உரிமம்பெற்ற நில அளவையாளர் H. S. முனசிங்ஹ என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2008.11.02 ஆந் திகதிய 2008/ 181 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் A என அடையாளமிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், இணைப்புகள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது பதினாறு தசம் மூன்று ஏழு பேர்ச்சஸ் (00ஏ. 00றூ. 16.37பே.) அல்லது 0.0414 ஹெக்டயார் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- எம்பிலிபிட்டிய நகரத்தில் மணிக்கூட்டு கோபுரத்தின் அருகிலிருந்து மித்தெனிய பாதையில் சுமார் 250 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

7 ஆம் விற்பனை - 2021.06.07 ஆந் திகதி பி. ப. 02.30 மணிக்கு.

**சொத்து விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், எம்பிலிபிட்டிய உடகம பனாமுர பாதை, இல. 825 எனும் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள அல்லது களஞ்சியப்படுத்தியுள்ள அல்லது கைப்பற்றியுள்ள அல்லது பொருத்தப்பட்டுள்ள சகல அசையும் சொத்துக்களும் மற்றும் சகலதும்.

**சொத்து விபரம்**

கண்ணாடி பொருட்கள்
போட் வகைகள்
அலுமினியம் (Swiss/Alumex)
வெள்ளை இரும்பு
க்லெடின் ஷீட்
சீலிங் பார்
டைல்ஸ்
டோர் என்ட் வின்டோ பிட்டிங்/ ஹின்ஜர்ஸ்
அலுமினியம் பிட்டிங்ஸ்
மற்றைய கட்டிடப் பொருட்கள்

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2021.02.25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2021.02.09 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் 2021.02.10 ஆந் திகதிய "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில்

கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1500.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 3,000.00 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- முகாமையாளர்-சட்டப் பிரிவு, D.F.C.C. வங்கி P.L.C., இல. 73, W. A. D. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02, தொலைபேசி இல.: 011-2371371.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.
தொலைபேசி இல.: 071-4962449, 071- 8446374.

05-202

---

## அமானா வங்கி PLC

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட சட்டம்) 9 ஆம் பிரிவின் கீழ் அமானா வங்கி PLC பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கச்சி மொஹொமட் நஜீம் என்பவர் கடப்பாடுடையவராக அமானா வங்கி PLC இனால் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக அமானா வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில், 2021.06.02 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**சொத்து விபரம்**.- அம்பாறை மாவட்டம், பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில், பொத்துவில் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இல. AP/25, ஊரணி கிராம அலுவலர் பிரிவில், ஊரணி கிராமத்தில் அமைந்துள்ள ஊரணி காடு (TP 178889) வரைபடத்தின் ஒரு பகுதி) எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் P. தர்மேந்திரம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2017.06.24 ஆந் திகதியிடப்பட்ட PT 213 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 02 ஏக்கர் 18.7 பேர்ச் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்**.- பொத்துவில் நகரத்தின் மணிக்கூட்டு கோபுரத்தின் அருகிலிருந்து அக்கரைப்பற்று பாதையில் சுமார் 6.9 கி. மீ. தூரம் ஊரணி பாலத்தைக் கடந்து சுமார் 400 மீற்றர் தூரம் சென்று வலது பக்கமாகச் சந்திக்கும் மூன்றாம் பாதைக்குள் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 400 மீற்றர் தூரம் சென்று நாற்சந்தியைக் கடந்து சென்றதும் இவ்வாதனம் இப்பாதையின் இடது பக்கத்தில் பாதையின்எல்லையில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2021.01.22 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2021.01.22 ஆந் திகதிய "திவயின", "டெய்லி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/ 2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா ;
(6) நொத்தாரிமசு கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூபா 3,000.00.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன்

விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அமானா வங்கி PLC இற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு:** "முகாமையாளர், அமானா வங்கி PLC, இல.486, காலி வீதி, கொழும்பு 3, தொலைபேசி இல. 011-7756000 EXT 2112" உடன் தொடர்பு கொள்ளவும்.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/ 1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மடை,
கண்டி.
தொலைபேசி இல.: 081-2210595, 071- 8446374,
071- 4962449.

05-199

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

*(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

கே. எம். எஸ். துஷார
கணக்கு இல. 0049 5000 3540

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.12.16 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.04.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2021.04.07 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, இரண்டு கோடியே பதினாறு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து அறுநூற்றைந்து ரூபா இருபது சதம் (ரூ. 2,16,82,605.20) 2020, நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே அறுபது இலட்சத்து ஏழாயிரத்து நாநூற்றிருபத்தொரு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 1,60,07,421.13) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் இருபத்தாறு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து எண்ணூற்றுமூன்று ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 26,36,803.55) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தெட்டு வீதம் (28%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 1644, 1396, 2486 மற்றும் 2587 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான கே. பீ. என். சில்வா என்பவர் மூலமாக அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து 2021.06.16 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கும், அட்டவணை 3 இல் குறிப்பிடப் பட்டுள்ள சொத்து 2021.06.16 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கும், அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து 2021.06.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கும் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### அட்டவணை

1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோரலே வெலிகம நகரசபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பரனகடே-இல. 382A, கிராம அலுவலர் பிரிவிற்குள் வெலிகம பரன வீதிய கிராமத்தில் அமைந்த "கர்ட்டாடம்பிய டன்டல்வத்த எனும் கருஹுந்தல் தோட்டத்தின் லொட் D மற்றும் E இன் பெலிகாஹாவத்த எனும் கொரட்டுவ மற்றும் ஹொதிஹட்டிய வத்த எனும் கெதரவத்தையின் லொட்கள் A மற்றும் B உட்படுத்தப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட காணியின் லொட் 1 இன் ஒன்றிணைப்பான லொட் 1A, $1B^1$, $1B^3$ " என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எல். ஏ. எம். ஹிஷாம் என்பவரால் தயாரிக்கப்பட்ட (2013.03.05 ஆந் திகதி நில அளவீடு செய்யப்பட்ட) 2013, மாச்சு 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 2618 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இல. 2618 எனும் வரைபடத்தில் லொட்கள் 2 மற்றும் 06 (வீதி) ; கிழக்கு : இல. 2618 எனும் வரைபடத்தில் லொட் 06 (வீதி) ; தெற்கு : இல. 2618 எனும் வரைபடத்தில் லொட்கள் 04 மற்றும் 05 (வீதி) ; மேற்கு : இல. 2618 எனும் வரைபடத்தில் லொட் 02 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ.10.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன், கூறப்பட்ட இல. 2618 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் P 07/ 130 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 2618 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட கூறப்பட்ட லொட் 06 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இல. 1644 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரலே, உடுகஹாபத்துவின் சீதாவக்கை மாநகர சபை எல்லைகளுக்குள் ஹன்வெல்லை பிரதேச செயலாளர் பிரிவின் சீதாவக்க-இல. 432/B கிராம அலுவலர் பிரிவிற்குள் அவிஸ்ஸாவலையில் அமைந்த ''சியம்பலாகாஹாகாவ

வத்தையின் ஒரு பகுதி'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எம். கமகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, சனவரி 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 2063 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : லொட் 313 அப் 12 இன் ஒரு பகுதி ; கிழக்கு : வயல் வெளி ; தெற்கு : லொட் 313 அப் 14 இன் ஒரு பகுதி ; மேற்கு : பன்சாலை வீதி ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் பதினொன்று தசம் ஒன்று ஏழு பேர்ச் (0ஏ. 0றூ.11.17பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன், கூறப்பட்ட இல. 2063 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் P 232/ 106 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 1396 மற்றும் 2486 எனும் ஈட்டுமுறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

3. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரலே வெலிகம நகரசபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் பரனகடே-இல. 382A கிராம அலுவலர் பிரிவிற்குள் வெலிகம பழைய வீதியில் அமைந்த காலி-மாத்தறை வீதி வரிமதிப்பீட்டு இல. 267 ஐ ஏற்ற "கர்ட்டாடம்பிய டன்டல்வத்த எனும் கருஹந்தல் தோட்டத்தின் லொட் D மற்றும் E இன் பெலிகாஹாவத்த எனும் கொரட்டுவ எனும் கொரட்டுவை எனும் ஹொதிஹட்டிய வத்த எனும் கெதரவத்தையின் லொட்கள் A மற்றும் B உட்படுத்தப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட காணி'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எல். ஏ. எம். ஹிஷாம் என்பவரால் தயாரிக்கப்பட்ட (2013.03.05 ஆந் திகதி நில அளவீடு செய்யப்பட்ட) 2013, மாச்சு 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 2618 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : இல. 2618 எனும் வரைபடத்தில் லொட் 3; கிழக்கு : இல. 2618 எனும் வரைபடத்தில் லொட் 03 (வீதி) ; தெற்கு : காலி-மாத்தறை பிரதான வீதி ; மேற்கு : இல. 2618 எனும் வரைபடத்தில் லொட் 04 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச் (0ஏ. 0றூ.10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன், கூறப்பட்ட இல. 2618 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் P 118/ 125 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 2587 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

05-218

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.